# <u>தமிழ் நாடு உப்பு நிறுவனம்</u>

## <u>வாலிநோக்கத்தில் நிறுவப்பட்டுள்ள உப்பு சுத்திக்கரிப்பு ஆலையினை துவங்கி வைத்தல்</u>

தமிழ்நாடு உப்பு நிறுவனம், தமிழ்நாட்டில் மிகவும் பின்தங்கிய இராமநாதபுரம் மாவட்டத்திலுள்ள மக்களுக்கு வேலை வாய்ப்பினை வழங்கி, அம்மக்களின் சமூக, பொருளாதார நிலையினை மேம்படுத்திடும் நோக்கில் 1974ஆம் ஆண்டு துவங்கப்பட்டது. அரசுக்கு சொந்தமான 5504.12 ஏக்கர் நிலம் நீண்ட கால குத்தகை அடிப்படையில் இந்நிறுவனத்திற்கு வழங்கப்பட்டுள்ளது. 1978ஆம் ஆண்டு வணிக உற்பத்தியினை தொடங்கிய இந்நிறுவனம் படிப்படியாக தனது உற்பத்தியினை விரிவாக்கம் செய்து வருகிறது. முதலில் தொழிலக தர உப்பு உற்பத்தியை தொடங்கி, பின்னர் பலவகை செறிவூட்டப்பட்ட உப்பினை உற்பத்தி செய்து வருகின்றது. இத்திட்டம் 15 கிராமங்களை சேர்ந்த 1350 நபர்களுக்கு நேரடி வேலை வாய்ப்பும் மற்றும் 300 நபர்களுக்கு மறைமுக வேலை வாய்ப்பும் வழங்கி வருகின்றது.

இந்நிறுவனம் 2016–17 ஆம் நிதியாண்டில் 14.03.2017 அன்று வரை 2,02,595 டன் தொழிலக தரமுடைய உப்பினை உற்பத்தி செய்துள்ளது. இது இந்நிறுவனத்தின் மிக உயர்ந்த பட்ச உற்பத்தி அளவாகும். இந்நிறுவனம் உற்பத்தி செய்கின்ற இருவித (இரும்பு மற்றும் அயோடின்)செறிவூட்டப்பட்ட உப்பு, சுத்திகரிக்கப்பட்ட அயோடின் கலந்த தூள் உப்பு மற்றும் குறைந்த அளவு சோடியம் கொண்ட உப்பு ஆகியவற்றினை **"அம்மா உப்பு"** என்ற பெயரில் 11.06.2014 அன்று வெளிச்சந்தையில் விற்பனையை துவங்கியது. அதனை தொடர்ந்து அம்மா உப்பு என்ற அதே பெயரில் அயோடின் கலந்த கல் உப்பினை வெளிச்சந்தையில் நவம்பர் 2014–ல் விற்பனையினை துவங்கியது. பொது மக்கள் பயன்பெறும் பொருட்டு மேற்குரிய உப்பு வகைகளை நியாயவிலை கடைகளில் விற்பனை செய்வதற்காக பிப்ரவரி 2015–ல் இருந்து

விநியோகம் செய்து வருகின்றது. 14.03.2017 வரை, 47,874 டன் அம்மா உப்பு வெளிச்சந்தை மற்றும் பொது விநியோகத் திட்டத்தின் மூலமாக விற்பனை செய்யப்பட்டுள்ளது.

மாண்புமிகு தொழில்துறை அமைச்சர் அவர்கள் 2012–2013 ஆம் ஆண்டு தொழில் மானிய கோரிக்கையின் பொழுது, தமிழ் நாடு உப்பு நிறுவனம் அதன் உப்பு விற்பனை அளவினை அதிகரித்திட உப்பு சுத்திக்கரிப்பு தொழிற்சாலையினை மாரியூர் வாலிநோக்கம் உப்பு கூட்டுத் திட்டத்தில் நிறுவும் என்ற அறிவிப்பினை வெளியிட்டு இருந்தார்கள்.

அவ்அறிவிப்பினை தொடர்ந்து, தமிழ் நாடு உப்பு நிறுவனத்தின் நிர்வாக இயக்குனர் அவர்கள் மேற்கூரிய ஆலையினை நிறுவுவதற்கான நடவடிக்கைகளை நிதி துறை வெளியிட்டுள்ள வழிகாட்டு நெறிமுறைகளின் படி உரிய நடைமுறைகளை பின்பற்றி மேற்கொள்ள வேண்டும் என கூறி அரசு ஆணை (எண். 195/தொழில்துறை, நாள். 21.11.2012) வெளியிடப்பட்டுள்ளது.

ரூபாய் 5.65 கோடி செலவிட்டு தொகையில் இவ்வாலையினை நிறுவுவது தொடர்பாக, கருத்துரு ஒன்று 07.1.2014 அன்று நடைபெற்ற திட்ட மூதலீட்டு குழு கூட்டத்தில் அதன் ஒப்புதலுக்காக சமர்பிக்கப்பட்டது. இக்குழுவின் ஒப்புதலுக்கு பின்னர், தொழிற்துறை தமிழ் நாடு உப்பு நிறுவனம் அதன் சுய நிதியினைக் கொண்டு ரூபாய் 5.65 கோடி செலவிட்டு தொகையில் இத்தொழிற்சாலையினை நிறுவிட அரசு ஆணையினை வெளியிட்டுள்ளது.

இத்திட்டத்திற்கா அடிக்கல் அப்போதைய தமிழக முதல்வர் அவர்களால் 29.01.2016 அன்று சென்னை தலைமை செயலகத்தில் காணொலிக் காட்சி மூலமாக நாட்டப்பட்டது.

தமிழ் நாடு உப்பு நிறுவனம் இருவித செறிவூட்டப்பட்ட உப்பினை உற்பத்தி செய்து மதிய உணவு திட்டத்திற்கு வழங்கி வருவதால், இந்நிறுவனத்தின் இருவித செறிவூட்டப்பட்ட உப்பு உற்பத்தி அளவினை அதிகரித்திட இந்நிறுவனம் புதிதாக நிறுவவுள்ள  உப்பு சுத்திக்கரிப்பு தொழிற்சாலைக்கு தேவைப்படும் நிதி மற்றும் தொழிற்நுட்ப உதவினை வழங்கிட டாட்டா டிரஸ்ட் (TATA TRUST) நிறுவனம்  முன் வந்துள்ளது. டாட்டா டிரஸ்ட் நிறுவனம் மக்களிடையே காணப்படும் நுண்ணுட்டச்சத்து குறைகளை போக்கும் விதமாக சேவையினை செய்து வருகின்றது.

அரசின் அனுமதி பெற்று தமிழ் நாடு உப்பு நிறுவனம் டாட்டா டிரஸ்ட் உதவியினை பெற்றுக் கொள்ள சம்மதம் தெரிவித்தது.  அதன்படி டாட்டா டிரஸ்ட் நிறுவனம் உப்பு சுத்திகரிப்பு தொழிற்சாலை அமைக்க தேவையான இயந்திரங்களை வாங்க வேண்டி ரூபாய் 4 கோடி நிதி உதவி வழங்கியது.

இத்தொழிற்சாலை அமைக்கும் பணி கடந்த ஏப்ரல் 2016–ல் துவங்கி தற்போது அனைத்து பணிகளும் நிறைவடைந்துள்ளது.  இத்தொழிற்சாலை அமைவதால் சுமார் 100 நபர்களுக்கு நேரடி வேலைவாய்ப்பும் சுமார் 50 நபர்களுக்கு மறைமுக வேலைவாய்ப்பும் கிடைக்கும்.